

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முரசொலி நாளிதழில் தலைமைக் கணக்காளராகப் பணியாற்றிய அழகு மாணிக்கம் அவர்கள் காலமானதையொட்டி பெசன்ட் நகரிலுள்ள அவரது இல்லத்திற்கு 2.10.2025 அன்று நேரில் சென்று, அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கவிப்பேரரசு வைரமுத்து, 'முரசொலி' பொது மேலாளர் எஸ். ராஜசேகரன் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் நடைபெற்ற மூன்றாம் கண் எனப்படும் (சிசிடிவி) கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாட்டினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து பேசினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் சு.நாகரத்தினம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மன்னார்குடியில் பிரமாண்ட நவீன பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரில் ஆய்வு!

திருவாரூர், அக்.6-

மன்னார்குடி நகராட்சியில், ரூ.46.46 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம், எதிர்வரும் 12.10.2025 ஞாயிறு அன்று, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச்செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர்களின் முன்னிலையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது .

நகரின் மத்தியில் பிரமாண்டமாய் அமைக்கப்பட்டிருக்கும் இந்த நவீன பேருந்து நிலையத்தில் 200க்கும் மேற்பட்ட சிறுவணிக கடைகளும் ,ஏ.டி.எம் .உள்ளிட்ட அத்யாவசிய வசதிகளும், பொதுசுகாதார வசதி, வாகன நிறுத்த வசதிகளுடன் காற்றோட்டமான பேருந்து நிறுத்த வசதியும்செய்யப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயர் சூட்டப்பட்ட இந்த அதிநவீன பேருந்து நிலைய கட்டுமனப்பணிகள் முடிவடைந்து வரும் நிலையில், பேருந்து நிலையத்தை தொழில்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா அவர்கள் அரசு அதிகாரிகள் முன்னிலையில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் நகர செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை. த.சோழராஜன், வர்த்தகர் சங்க தலைவர் ஆர்.வி.ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ். டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், மாவட்ட பிரதிநிதி ஜே.உத்தமன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

## திடலின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க அறிவாலயம் பணியாற்றும்!

# சுயமரியாதை இயக்கத்தின் ஆட்சி அதிகார நீட்சியான 'திராவிட மாடல்' தொடரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 6-

சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டையொட்டி வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "திடலின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க அறிவாலயம் பணியாற்றும்! நூறாண்டு கண்ட சுயமரியாதை இயக்கத்தின் ஆட்சி அதிகார நீட்சியான 'திராவிட மாடல்' தொடரும்!" என்று குறிப்பிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

**நமது ஒட்டுமொத்தப் போராட்டத்தையும் ஒற்றைச் சொல்லில் அடையாளப்படுத்த வேண்டும் என்றால், அதுதான் சுயமரியாதை!**

**அந்த உணர்வை நம்முள் விதைத்து, மானமும் அறிவும் உள்ள மக்களாக நம்மை மாற்றிய தந்தை பெரியாருக்காகத் திருச்சி சிறுகனூரில் அமையும் பெரியார் உலகத்துக்குத் தி.மு.க.வின் அனைத்து எம்.எல்.ஏ., எம்.பி.களும் தங்களது ஒரு மாத ஊதியத்தை வழங்குவோம்!**

**மானமிகு ஆசிரியர் அய்யா அவர்களே... உங்கள் பணிகளை நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம்!**

**திடலின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க அறிவாலயம் பணியாற்றும்! நூறாண்டு கண்ட சுயமரியாதை இயக்கத்தின் ஆட்சி அதிகார நீட்சியான 'திராவிட மாடல்' தொடரும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்!

## தே. மதியழகன் எம்.எல்.ஏ. ஆய்வு!

கிருஷ்ணகிரி, அக்.6-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த மருத்துவ முகாமில் 2,212 பேர் பதிவு செய்து மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் பயனடையும் வகையில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை நாட்களில் தலா 3 முகாம்கள் என 10 வட்டாரங்களில் 30 மருத்துவ முகாம்களும், மாநகராட்சியில் 3 முகாம் என மொத்தம் 33 மருத்துவ முகாம்கள் நடைபெறது. இன்று மத்தூரில் நடைபெற் மருத்துவ முகாமில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சைக்கான மருத்துவ ஆலோசனை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், சித்த மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த முகாமில் 2,212 பேர் பதிவு செய்து சிகிச்சை பெற்றனர். மேலும் இம்மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டன. மேலும் உயர் சிகிச்சை தேவைப்படுவோர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்படனர். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் இந்த மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள், கட்டுமான தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஒய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை வழங்கி, மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால் வழங்குவதற்கான அளவுகள் மேற்கொள்ளும் பணிகளை பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தில் , பொதுக்குழு உறுப்பினர் நாகராசன்,

ஒன்றிய செயலாளர் குணவசந்தரசு, உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் பல்கலைக் கழக மசோதா!

# ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிட வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு!

சென்னை, அக்.6-

கலைஞர் பல்கலைக் கழக மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக்கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட மசோதா கடந்த ஏப்ரல் மாதம், தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. கலைஞர் பெயரில் அமைக்கப்படும் பல்கலைக்கழகத்துக்கு வேந்தராக முதலமைச்சரை நியமிக்கவும் மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. துணைவேந்தர் நியமன மசோதா உள்ளிட்டவை தொடர்பான வழக்குகளில், 3 மாதங்களுக்குள் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து முடிவெடுக்க வேண்டும் என்று ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கெடு விதித்திருந்தது. ஆனால் கலைஞர் பல்கலைக்கழக மசோதா நிறைவேற்றப்பட்டு 3 மாதங்களாக ஒப்புதல் அளிக்காமல் இருந்த ஆளுநர் ஆர்.என். ரவி, கடந்த ஆகஸ்ட் மாதம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய செயலுக்கு எதிராக எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

மசோதாவை ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பிய செயல் சட்டவிரோதமானது என்றும், அரசியல் சாசனப் பிரிவு 163, 200க்கு எதிரானது என்றும் அறிவிக்குமாறு தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.

ஆளுநரின் முடிவை ரத்து செய்து, மசோதாவை ஆளுநருக்கே குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்ப உத்தரவிடவும் வலியுறுத்தியுள்ளது. அரசியல் சாசன பிரிவு 200ன் படி, மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## அரியலூர் மாவட்ட

# ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், அக்.6-

அரியலூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் அரியலூர் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் இல்லத்தில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர்,

BLA 2,& BLC ஆகியோரின் பணிகள் குறித்தும், வாக்காளர் பட்டியல் திருத்தல் பணிகள் குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

உடன் குன்னம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே. அருண்,அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு

மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன்,

ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, நகர கழக செயலாளர்கள் இரா. முருகேசன், வெ.கொ.கருணாநிதி,பேரூர் கழக செயலாளர் ப.கோபால கிருஷ்ணன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள், பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. அசோகசக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன்,

நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன்,இரா.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் அ.அல்போன்ஸ்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன் மற்றும் மாநில,மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# வேளாண் பல்கலைக் கழகங்களில் நுழைவுத் தேர்வு!

## ஒன்றிய அரசு அறிவிப்பு!

புதுடெல்லி, அக். 5–

வேளாண் பல்கலைக் கழகங்களில் 20 சதவீத இளங்கலை இடங்கள், இனி அகில இந்திய நுழைவுத் தேர்வு மூலம் நிரப்பப்படும் என்று, ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் தற்போது, 74 வேளாண் பல்கலைக்கழகங்கள் உள்ளன. அதில் 63 பல்கலைக்கழகங்கள், மாநில அரசுகளால் நேரடியாக நடத்தப்படும் பல்கலைக்கழகங்களாகும். இதில் 28 ஆயிரம் மாணவர்கள் இளநிலை கல்வியும், 17 ஆயிரத்து 500 மாணவர்கள் முதுநிலை கல்வியும் கற்று வருகின்றனர். இந்நிலையில், இதில், நுழைவு தேர்வு மூலம் 20 சதவீத இடங்களை நிரப்ப உள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இது குறித்து, டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஒன்றிய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் மூலம் நடத்தப்படும் கியூட் நுழைவு தேர்வு மூலம் 20 சதவீத மாணவர் சேர்க்கை நடத்தப்பட உள்ளதாக கூறினார். 12ம் வகுப்பில் உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதம், வேளாண்மை படித்த மாணவர்கள் கியூட் தேர்வு எழுதலாம் என்றும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் வெளிப்படையான முறையில் மாணவர் சேர்க்கை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.



மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை மற்றும் மீள் மையத்தினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்து,தீவிர சிகிச்சைபிரிவிற்கு 5அடுக்கு தளப் பணிகளை ஆய்வு செய்தார்.மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன், நகர செயலாளர் வீரா.கணேசன், நகரமன்றத் தலைவர் மன்னை த.சோழராஜன்,ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி முத்துவேல், சித்தேரி சிவா, கே.வி.கே.ஆனந்த், வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.வி.ஆனந்த் இணை இயக்குநர் மரு.எஸ்.சுரேஷ், தலைமை மரு. என்.விஜயகுமார்மற்றும் கழகநிர்வாகிகள் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த மருத்துவ முகாமில் 2,212 பேர் பதிவு செய்து மருத்துவ சிகிச்சை பெற்றனர்.